Swamy Vipulananda
Institute of Aesthetic Studies,
Eastern University, Sri Lanka.

# 2nd International Conference

SVIAS International Conference

## Challenges and Importance of Intangible Cultural Heritage in times of war and post war

Abstracts

2017

BATTICALOA, SRI LANKA

# ஜெயலலிதாவும் ஈழத்தமிழர்சார் பிரச்சினையில் அவரது அணுகுமுறையும் - சிவில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியினை அடிப்படையாகக்கொண்ட ஆய்வு

**பேராசிரியர் க.அருந்தவராஜா**
இணைப்பேராசிரியர்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**ஆய்வுச்சுருக்கம்**

ஈழத்தில் இடம்பெற்றுவந்த இனப்பிரச்சினையைப் பொறுத்து ஜெயலலிதாவினது நிலைப்பாடானது எப்போதும் உறுதியானதாக இருந்ததில்லை. தமிழகத்தினது முதல்வராகப் பதவியேற்ற காலத்திலிருந்து ஈழத்தமிழரது பிரச்சினையில் அக்கறை கொள்ளாதவராகவே இவரது நடவடிக்கைகள் அமைந்திருந்தன. ஆரம்பகாலங்களில் தமிழகத்தினைச் சேர்ந்த ஈழப்பற்றாளர்களுக்கும் ஈழ ஆதரவாளர்களுக்கும் எதிராகக் கடுமையான போக்கினைக் கையாண்டிருந்தவர். இத்தகையதொரு பின்னணியில் அச்சமயத்தில் ஈழத்துத் தமிழ் மக்களால் இவர் விரும்பப்படாத ஒருவராகவே இருந்துள்ளார். ஆனால் 2009இன் நடுப்பகுதிவரை ஏறத்தாள 28 வருடங்களாக மாற்றமடையாத அவரது மனநிலை ஈழத்தில் நடைபெற்ற இறுதி யுத்தத்தின் முடிவில் மாற்றங்கண்டது. அது அவரை ஈழப்பற்றாளராக மாற்றியது. தொடர்ந்து இலங்கை அரசிற்கு எதிராக கண்டன அறிக்கைகள் பலவற்றினை விடுத்தார். ஈழத்தமிழர்கள் போரினால் பாதிக்கப்படும்போது கருணாநிதி வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார் என்று அவருக்கெதிராகப் பிரசாரத்தினை மேற்கொண்டு வந்தார். அவர்மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து எப்படியாவது 2011இல் நடைபெறவுள்ள சட்டமன்றத்திற்கான பொதுத்தேர்தலில் ஆட்சியினைக் கவிழ்த்துவிட வேண்டுமென எண்ணினார். வெற்றியும் கண்டார். இதில் வேடிக்கை யாதெனில் 1991இல் நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில் புலிகளை எதிர்த்துப் பிரச்சாரம் செய்து கருணாநிதியினைத் தோற்கடித்தவர். 2011இலும் 2016இலும் நடைபெற்ற தேர்தலில் புலிகளையும் அவர்களது தனிநாட்டுக் கோரிக்கையினையும் முன்வைத்துப் பிரசாரம் செய்து கருணாநிதியினைத் தோற்கடித்திருந்தார். பொதுப்படப் பார்த்தால் தமிழகத்தில் ஜெயலலிதா வெற்றிபெற்று ஆட்சியினை அமைத்திருந்த சட்டமன்றத்திற்கான பொதுத்தேர்தல்கள் எல்லாவற்றிலும் ஈழத்தமிழரது பிரச்சினையானது ஏதோ ஒரு வடிவத்தில் அவரால் சுயநல நோக்குடன் பயன்படுத்தப்பட்டதென்பதே உண்மை. அதுவும் சிவில் யுத்த காலத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அவர் ஈழத்தமிழருக்கு ஆதரவாக எடுத்த நடவடிக்கைகள் எல்லாமே சந்தர்ப்பவாதத் தன்மைகள் கொண்டனவாகவே அமைந்திருந்தன. வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் அமையப்பெற்ற இவ்வாய்வானது முதற்தர மற்றும் இரண்டாந்தர ஆதாரங்களைப் பயன்படுத்தி விமர்சனப் பார்வையில் நோக்கப்படுகின்றது.

பிரதான சொற்பதங்கள் : தமிழர் சார்புநிலை, சட்டமன்றத் தீர்மானங்கள், இராஜதந்திரம், சிவில்யுத்தம், சந்தர்ப்பவாத அரசியல்

**அறிமுகம்**

இலங்கையில் நடைபெற்று வருகின்ற இனப்பிரச்சினையானது நீண்டதொரு வரலாற்றுப் பின்னணியினைக் கொண்டிருந்தபோதும் அதன் உச்சவெளிப்பாடானது நாடு சுதந்திரம் பெற்றதன் பின்னராகவே வெளிப்படையாகத் தோன்ற ஆரம்பித்ததென்பது பொதுவான விடயம். இத்தகைய இலங்கையின் அரசியல் பிரச்சினையானது அடிப்படையில் நூறு வருடங்களை எட்டப்போகின்ற பிரச்சினையாக தொடர்ந்து வருகின்றது. ஆங்கிலேயர் காலத்தில் அவர்களால் திட்டமிடப்பட்டு விதைக்கப்பட்ட இதற்கான விதையானது இன்று பெரும் விருட்சமாக வளர்ந்து தமிழ் - சிங்கள மக்களிடையிலே முரண்பாட்டினைத் தோற்றுவித்துப் பல உயிர் உடமைச் சேதங்களை தற்காலம் வரை ஏற்படுத்தி வந்திருக்கின்றது. (Wilson,A.J.1988)2009இல் இரு பகுதியினருக்குமிடையிலான

உள்நாட்டு யுத்தமானது முடிவிற்கு வந்துவிட்டதென்று கூறப்பட்டாலும்கூட வடக்கிலும் கிழக்கிலும் வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்களில் அனேகர் இன்றுவரை பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆயுதம் ஏந்தா அகிம்சைப் போராட்டத்தினை மீண்டும் இலங்கை அரசிற்கு எதிராக மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் இலங்கையின் இனப்பிரச்சினையானது தொடர் கதையாக இருந்து வருகின்ற இந்நிலையில் இலங்கைக்கு அயல்நாடான இந்தியாவிலுள்ள தமிழகத்திலும் இதனது தாக்கமானது தற்போதும் இருந்து வருகின்றதென்பதும் குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் பொதுவாகவே இலங்கையின் இனப்பிரச்சினையினை இந்தியாவுடன் தொடர்புபடுத்தாமல் பார்க்க முடியாது.

1980களின் தொடக்கத்திலிருந்து உள்நாட்டுப்போர் சூடுபிடிக்க ஆரம்பித்தமையின் பின்னணியில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்களில் சிலர் அகதிகளாகத் தமிழகம் நோக்கிச் செல்ல ஆரம்பித்தனர். 1983இல் இலங்கையில் நடைபெற்ற யூலைக் கலவரத்தின் பின்னராகத் ஈழத்தமிழருக்கும் அவர்களது போராட்ட நடவடிக்கைகளுக்கும் தமிழகத்தில் ஆதரவு பெருகியது. இப்பின்னணியிலேதான் தமிழகத்தினைச் சேர்ந்த அரசியல்வாதிகள் பலரும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவினை வழங்குவதன் ஊடாகத் தேர்தல் காலங்களில் தமிழக மக்களிடமிருந்து வாக்கினைப் பெற ஆரம்பித்தனர். தொடர்ந்து இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் நேரடியாக இந்திய அரசும், தமிழக அரசும் தலையிடவேண்டிய நிலைமை உண்டானது. எம்.ஜி.இராமச்சந்திரன் தமிழக முதல்வராக இருந்த காலத்தில் அவர் ஈழத்தமிழ் மக்களது அனுதாபியாக இருந்தமையின் பின்னணியில் தமிழகத்திற்கும் இலங்கை அரசுக்குமிடையில முறுகல்நிலை அதிகரிக்க ஆரம்பித்தது.

எம்.ஜி.இராமச்சந்திரனது மறைவினைத் தொடர்ந்து சிலகாலத்தின் பின்னராகப் பதவியிலமர்ந்த தமிழகத்தில் அவரது கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஜெயலலிதாவினுடைய நிர்வாகமானது எம்.ஜி.இராமச்சந்திரனுடைய கொள்கையினை அப்படியே கடைப்பிடித்து வந்தாலும் கூட இலங்கையினது இனப்பிரச்சினைப் பொறுத்தும், ஈழத்தமிழ் மக்கள் சார்புநிலை பொறுத்தும் அவரைப் போன்றதொரு நிலைப்பாட்டிலிருந்தாரா என்பது வினாவிற்குரியதே. ஜெயலலிதா முதலமைச்சராகத் தமிழகத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்திய காலப்பகுதி முழுவதும் அவரது நடவடிக்கைகள் பெருமளவிற்கு இலங்கையினது இனப்பிரச்சினை தொடர்பாக இராஜதந்திரத்தின அடிப்படையிலேதான் அமைந்திருந்தன. அவ்வகையில் இவரது கொள்கை வெளிப்படையானதாக இலங்கையின் இனப்பிரச்சினையைப் பொறுத்தும், ஈழத்தமிழர்கள் மீதான அனுதாபத்தைப் பொறுத்தும் அமையவில்லையென்றே கூறுதல் வேண்டும். ஈழத்தமிழ் மக்கள்மீது அனுதாபங்கொண்ட தமிழக மக்களையும், அங்கிருந்த சில அரசியல்வாதிகளையும் தேர்தல்களை இலக்கு வைத்துத் திருப்திப்படுத்துவாக [illegible] மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை. அதேநேரத்தில் இவருடைய மூன்றாவது பதவிக்காலத்தின் இறுதிப்பகுதியில் (2009இன் நடுப்பகுதியிலிருந்து) இலங்கை [illegible] அரசிற்கும் இவருடைய பேச்சுக்களும் ஈழத்தமிழர் சார்பாக இவரால் வெளியிடப்பட்ட தீர்மானங்களும், அறிக்கைகளும் தலையிடியினைக் கொடுத்ததென்பதனையும் மறக்க முடியாது. இலங்கையின் பெரும்பான்மையின இனவாத அரசியல் தலைவர்கள் சிலரும் இவரை எம்.ஜி.ஆரைப் போன்று தமது தேசத்தினது எதிரியாகவே இறுதிவரை இவரைப் பார்த்தனரென்பதும் குறிப்பிடத்தக்கது.

வன்னி நிலப்பரப்பில் நடைபெற்ற இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பொருட்டுக் குரல் கொடுப்பதன் மூலமாகத் தனது ஈழமக்களது மீதான அனுதாபத்தினை 2009 இன் மத்திய காலப்பகுதியிலிருந்து படிப்படியாக ஆரம்பித்தவர் ஜெயலலிதா. இக்காலப்பகுதியில் இவரது நடவடிக்கைகள் யாவும் தமிழ் ஊடகங்களினால் பாராட்டப்பட்டன. (தனபாலசிங்கம், வீ.வீரகேசரி,2016டிசம்பர்11) தன்னை ஈழ விடுதலை ஆதரவாளராகவும் இனங்காட்டினார். நெடுமாறன், சீமான், வை.கோபால்சாமி, திருமாவளவன், மணிவண்ணன், அமீர். கொளத்தூர் மணி போன்ற பல நீண்டநாள் ஈழப்போராட்ட ஆதரவாளர்களையெல்லாம் விஞ்சியதாக இவரது செயற்பாடுகள் அமைந்தன. இவரது அதிரடியான தீர்மானங்களும் அறிக்கைகளும் நடவடிக்கைகளும் கருணாநிதியினைக்கூட திணறடித்து விட்டது. இதனாலேயே கருணாநிதி இவர் எடுக்கின்ற முடிவுகளுக்குப் பின்னால் இழுபட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார். அதாவது, பதிலுக்கு இவரும் ஜெயலலிதாவிற்குப் போட்டியாக ஈழத்தமிழர் சார்பான அறிக்கைகளை விட வேண்டியநிலை ஏற்பட்டது. 2011இல் நடைபெற்ற தேர்தலுக்கான பிரச்சாரங்களிலீடுபட்ட சமயங்களிலெல்லாம் ஈழத்தமிழருக்கு தி.மு.க துரோகம் செய்ததாகக் கூறி வந்தார். இறுதி யுத்த காலத்தில் காங்கிரசுடன் சேர்ந்திருந்த தி.மு.க போரை நிறுத்துவதற்கான அழுத்தத்தினை மத்திய அரசிற்கு வழங்கவில்லை. தான் பலமுறை

வற்புறுத்தியும் அதற்கு தி.மு.க செவி சாய்க்கவில்லை போன்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். தேர்தல் காலங்களில் ஜெயலலிதா ஈழத்தமிழரை முன்வைத்துச் செய்த பிரசாரம் அவருக்குப் பெரு வெற்றியினைக் கொடுத்திருந்தது. (அருந்தவராஜா, 2016)

பொதுப்பட ஜெயலலிதாவினைப் பொறுத்தவரை அவர் அரசியல் அதிகாரத்தினைக் கைப்பற்றுவதிலும் அதனைக் காப்பாற்றுவதிலும் திறமைசாலியாக விளங்கினார். தனது காலத்தில் அதாவது மூன்று தசாப்த காலத்திற்கும் மேலாக தமிழ்நாட்டினுடைய முன்னணி அரசியல் தலைவராக இருந்தது மட்டுமன்றி இந்தியா முழுவதிலும் செல்வாக்கினைப் பெற்ற ஒருவராகவும் விளங்கியிருந்தார். அரசியல் அதிகாரத்தினைக் கைப்பற்றிக் கொள்ளுவதற்காகவும் மத்திய அரசினைத் திருப்திப்படுத்துவதற்காகவும் அவ்வப்போது ஈழத்தமிழர் தொடர்பான கொள்கையினை மாற்றிவந்தவர். கொள்கையினை மாற்றுவதென்பது அரசியல்வாதிகளுக்குப் பொதுவானதொன்றாயினும் ஜெயலலிதாவினைப் பொறுத்த மட்டில் ஈழத்தமிழர் விடயம் பொறுத்து இது அதிகமாகவே காணப்பட்டதெனலாம்.

## ஆய்வுப்பிரச்சினை

ஜெயலலிதாவினைப் பொறுத்தவரை ஈழத்தமிழரது பிரச்சினையில் அவர் சிவில் யுத்த காலத்திற்குப் பின்னதான காலப்பகுதியில் மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவுமே உள்நோக்கம் கொண்டதாகவே அமைந்திருந்தன. அவை வெளிப்படையாக, உண்மையானதாக அமையவில்லை என்பதே ஆய்வினது முக்கியமான பிரச்சினையாகும்.

## நோக்கங்கள்

இவ்வாய்வானது பல்வேறு நோக்கங்களைத் தன்னகத்தே கொண்டமைந்துள்ளது.

1. சிவில்யுத்த காலத்திற்கு முற்பட்ட காலத்தில் ஈழத்தமிழரது பிரச்சினையைப் பொறுத்து ஜெயலலிதாவினது அணுகுமுறையினை எடுத்துக்காட்டுதல்.
2. சிவில்யுத்த காலத்திற்குப் பின்னரான காலத்தில் ஈழத்தமிழரது பிரச்சினைகள் பொறுத்து ஜெயலலிதா முன்னெடுத்த நடவடிக்கைகளை வெளிக்கொணர்தல்
3. எம்.ஜி.ஆர்-ஜெயலலிதா ஆகியோர்களது நடவடிக்கைகள் ஈழத்தமிழரது விவகாரத்தில் எவ்வகையில் அமைந்திருந்தன என்தனை ஒப்பியல்ஆய்வு மூலமாக தெரியப்படுத்துதல்.
4. இவ்விடயமாக எதிர்காலங்களில் ஆய்வினை மேற்கொள்ள முன்வருபவர்களுக்கான முன்னாடியான ஆய்வாக அமைதல்.

## கருதுகோள்கள்

1. ஈழத்தமிழரது பிரச்சினையில் ஜெயலலிதா எச்சந்தர்ப்பத்திலும் உறுதியான கொள்கை உடையவராக இருந்ததில்லை.
2. ஜெயலலிதாவினது அரசியல் நகர்வுகள் ஈழத்தமிழரது விவகாரம் பொறுத்து இராஜதந்திரத்தினடிப்படையிலேதான் அமைந்திருந்தன.

## ஆய்வுமுறையியலும் தரவுகள் சேகரித்தலும்

இவ்வாய்வானது பெருமளவிற்கு வரலாற்று முறையியல், ஒப்பீட்டு முறையியல், பகுப்பாய்வு முறையியல் என்பனவற்றின் துணைகொண்டு ஆராயப்படுகின்றது. முதல்தரத் தரவுகள் வரிசையில் தமிழ்நாட்டினது சட்டமன்ற அறிக்கைகள் பிரதான இடத்தினைப் பெறுகின்றன. இரண்டாந்தரத் தரவுகள் வரிசையில் நூல்கள், சஞ்சிகைகள், இணையத்திலிருந்து பெறப்பட்ட தரவுகள், பத்திரிகைகள், நேர்காணல்கள் போன்றன பிரதான இடத்தினைப் பெறுகின்றன.

## ஆய்வினது வரையறை

பொதுவாக இவ்வாய்வானது தனது ஆய்விற்கான காலப்பகுதியினை ஈழத்தில் சிவில்யுத்தம் நடைபெற்று முடிந்த காலத்திலிருந்து ஜெயலலிதா மரணித்த காலம் வரையான பகுதியினை (2009 ஏப்ரல் - 2016 டிசம்பர்) வரையறுத்துள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

சிவில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் ஈழத்தமிழரது பிரச்சினையில் ஜெயலலிதாவினது அணுகுமுறைகள் தொடர்பாகக் குறிப்பிடத்தக்க வகையில் எந்த ஒரு இலக்கியமும் வெளிவரவில்லை. இருப்பினும் க.அருந்தவராஜா அவர்களது அண்மையில் வெளிவந்த "ஜெயலலிதா ஒரு சரித்திரம்" என்ற தலைப்பிலான நூலின் ஒரு அத்தியாயத்தில் இவ்விடயமாகக் குறிப்புக்கள் சில உள்ளன. மேலும் வீரகேசரி, தினக்குரல், உதயன், வலம்புரி போன்ற பத்திரிகைகள் சிலவற்றில் யதீந்திரா, தனபாலசிங்கம், தேவானந்த் போன்ற சிலர் ஜெயலலிதா மறைந்த காலப்பகுதியில் இவ்விடயமாகக் கட்டுரைகள் சிலவற்றினை எழுதியிருந்தனர். அக்கட்டுரைகளும் அவரது பொதுவான செயற்பாடுகள் பற்றிக் கூறுவதாகவே உள்ளன. யதீந்திரா அவரது மறைவிற்கு அனுதாபப்படுவதில் தவறில்லை எனவும் ஆனால் அந்தளவிற்கு இவரை ஈழத்தமிழர் பிரச்சினையில் அக்கறை கொண்ட ஒருவராகக் கருத முடியாதெனவும் தனபாலசிங்கம் யுத்த காலத்தில் அவரது நடவடிக்கைகள் எவ்வாறிருந்தன என்பது பற்றியும் தேவானந்த் ஈழத்தமிழருக்காக அவர் இறுதி நாட்களில் செய்த சேவைகள் பற்றியும் விபரித்துள்ளார். மற்றபடி இவ்விடயமாகச் சொல்லிக்கொள்ளத்தக்க வகையில் நூல்கள் எவையும் வெளிவரவில்லை.

**சுருக்கமும் முடிவுரையும்**

இந்தியாவினைப் பொறுத்தவரை பிராமண சமூகத்தினால் எதிர்க்கப்பட்ட திராவிட இயக்கத்தின் தலைமைத்துவத்தினை ஏற்ற பிராமணப் பெண்ணாக மட்டுமன்றி அணாதிக்க சமுதாயத்தில் பெண்களும் சரிநிகராக மிளிர வேண்டுமென்பதனை செயலில் காட்டியவர் ஜெயலலிதா. அவ்வகையில் தமிழக மக்களால் அன்பாக "அம்மா" என அழைக்கப்பட்ட இவர் அவர்களது உடன் பிறவாத சகோதரர்களான ஈழத்தமிழ் மக்களது பிரச்சினைகளைப் பொறுத்தவரை அவர் "அம்மா" என்பதற்கும் மேலாக ஒரு அரசியல்வாதியாகவே நடந்தாரென்பது வெள்ளிடைமலை. பிற அரசியல்வாதிகளைப் போன்று ஜெயலலிதாவினது நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் அரசியல் உள்நோக்கங்கள் கொண்டவையாக எப்போதும் இருந்திருக்கின்றன. அது ஈழத்தமிழரது விடயத்திலும் அமைந்தமை கவலைக்குரியதே. ஏறத்தாள 2009வரை ஈழத்தமிழருக்காகவும் அவர்களது போராட்ட இலக்கிற்காகவும் சாதகமாகப் பேசாத இவர் ஏறத்தாள 2009இன் நடுப்பகுதியளவிலிருந்து அதாவது சிவில் யுத்தமானது முடிவடைந்த காலப்பகுதியின் பின்னராகத் தன்னை ஒரு ஈழ ஆதரவாளராக மாற்றிக்கொண்டார். இத்தகைய இவரது மனமாற்றமானது தமிழகத்து மக்களுக்கு மட்டுமன்றி உலகத்தில் வாழ்ந்து வருகின்ற தமிழர்கள் எல்லோருக்குமே மகிழ்ச்சியினை அளிப்பதாக அமைந்தது. எது எவ்வாறியினும் அவர் உயிருடன் தற்போது இருந்திருப்பாரேயானால் ஈழத்தமிழருக்கு ஒரு அரசியல் பலமாக அமைந்திருக்குமென்பதனையும் இனவாதிகள் சிலருக்கு நெருக்கடியாகவும் இருந்திருக்கும் என்பதனையும் ஏற்றுக்கொள்ளாமலிருக்க முடியாது. பேச்சுக்களின் மூலமாகவும் அறிக்கைகள், தீர்மானங்கள் வாயிலாகவும் இத்தகையவர்களுக்கு எச்சரிக்கையினை விட்டுக்கொண்டிருந்திருப்பார்.

**உசாத்துணை நூல்கள்**


1. முகம்மது சமீம். (1998), ஒரு சிறுபான்மைச் சமூகத்தின் பிரச்சினைகள், றிசானா பப்ளிஸர்ஸ், கொழும்பு.
2. திருநாவுக்கரசு, மு. (1991), இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள், தமிழ்தாய் பதிப்பகம், யாழ்ப்பாணம்.
3. Wilson,A.J. (1988), The Break - Up of Sri Lanka ; The Sinhalese - Tamil Conflict, University of Hawai Press, London.
4. Vaasanthi, K. ( 2012), Jayalalithaa ; A Portrait, New Delhi : Penguin.

பத்திரிகைகளும் சஞ்சிகைகளும்

1. உதயன், நியூ உதயன் பப்ளிகேசன் பிறைவேட் லிமிட்டெட், யாழ்ப்பாணம்.
2. தினக்குரல், ஏசியா மீடியா பப்ளிகேசன் பிறைவேட் லிமிட்டெட், யாழ்ப்பாணம்
3. வலம்புரி, வலம்புரி அசோசியேசன் ஸ்தாபனம், யாழ்ப்பாணம்.
4 வீரகேசரி, எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர் பிறைவேட் லிமிட்டெட், கொழும்பு.

கருத்தரங்கு

11.05.2016 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினது வரலாற்றுத்துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட "தமிழகச் சட்டமன்றத் தேர்தல் 2016" என்ற தலைப்பிலான கருத்தரங்கில் க.அருந்தவராஜாவின் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்